## ஏப்ரல் - 9

**"பந்தயச் சாலையில் ஓடுகிறவர்கள் எல்லோரும் ஓடுவார்கள்; ஆகிலும், ஒருவனே பந்தயத்தைப் பெறுவானென்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக் கொள்ளத்தக்கதாக ஓடுங்கள்." - 1கொரி 9 : 24**

ஜெயங்கொள்ளுவதற்காக தேவனின் சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக் கொள்ளுவது மாத்திரமல்லாமல், நாம் சண்டையில் வீரராக இருந்து கண்ணின் இச்சைகளுடனும், மாம்சத்தின் இச்சைகளுடனும், ஜீவனத்தின் பெருமையுடனும், நீதி, தூய்மை இவைகளின் எல்லா சத்துருக்களுடனும் ஒரு தாக்குகின்ற போரையே தொடர வேண்டும். அன்பு கர்த்தருக்காகவும், சத்தியத்திற்காகவும், நீதிக்காகவும் காட்டுகிற அன்பு நம்மை ஏவ வேண்டும். அல்லது நாம் ஒருபோதும் ஜெயங்கொண்டவர்களாக மாட்டோம். அன்பு மாத்திரமே நம்மை மரண பரியந்தம் உண்மையுள்ளவர்களாக வைத்து, ஒளியிலுள்ள பரிசுத்தவான்களுடைய சுதந்திரத்துக்குத் தகுதியுள்ளவர்களாக்கும். எங்கே இருதயத்தில் ஊக்கமான அன்பு ஆளுகை செய்கிறதோ, அந்த இருதயம் முற்றிலுமாகக் கர்த்தருக்கு ஒப்புவிக்கப்பட்டிருப்பதைக் குறிக்கிறது. அது, போரின் பத்தில் ஒன்பது பாகம் ஏற்கனவே ஜெயிக்கப்பட்டு விட்டதைக் குறிக்கிறது. இருந்தாலும், அப்போஸ்தலன் சொல்லுகிற பிரகாரமாக ( யூதா 21) விழித்திருப்பதிலும், ஜெபத்திலும், ஆர்வத்திலும் நாம் நம்மை தேவனுடைய அன்பிலே காத்துக் கொள்ள வேண்டும். எங்கே அன்பு பெருகுகிறதோ? அங்கே கிருபை பெருகும். **-Z ’95, 93 (R 1798).**

* * * * *

கிறிஸ்தவ ஜீவியம் ஒரு பந்தய ஓட்டத்துக்கு ஒப்பிடப்பட்டிருக்கிறது. ஓட்டத்தில் ஜெயிக்க, ஜாக்கிரதையான ஆயத்தம், மிகுந்த உழைப்பு, குன்றாத விடாமுயற்சி, நேரான முயற்சி கூடுமானவரை விதிகளுக்கு நெருங்கி இணைந்திருப்பது ஆகியவைகள் வேண்டியிருக்கின்றன. இவைகளைப் புறக்கணிக்கிறவன் ஜெயிக்கத் தவறி விடுவான். அப்போது, கடைசிவரை இவைகளில் பிடிவாதமாய் நிற்பவனே நிச்சயமாய் வெற்றி பெறுவான். ஜெயிக்கத் தக்கதாக ஓட நமது முயற்சி இருக்க வேண்டும். **-P ’36, 48.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

சங் 19:5; பிர 9:11; எரே 12:5; பிலி 3:14; எபி 12:1; 1கொரி 9:25-27; கலா 2:2; 5:7; பிலி 2:16; 2தீமோ 2:5; 4:7,8; எபே 6:12; 1தீமோ 6:12; 1பேது 1:4;5:4; யாக் 1:12; வெளி 3:11.

**கோபுர வாசிப்பு : Z ’07, 260 (R 4050).**

**வினாக்கள் :** நான் இந்த வாரம் எப்படி ஓடினேன்? அதில் என்னுடைய நோக்கம் என்ன? அதில் உதவியாக அல்லது இடையூறாக இருந்தது எது? அதிலிருந்து கிடைத்த பலன் என்ன?